**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செங்கோட்டை**

**முன்னிலை: திரு.K.N.குரு, பி.ஏ.,பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, செங்கோட்டை**

2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 08 ஆம் நாள் திங்கள்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.78/2021</u>**

(CNR No.TNTS11-006906-2021)

பக்கீர் மைதீன் ..... வாதி

/எதிர்/

1. முகம்மது கனி(இறப்பு)
2. மைதீன் பிச்சை
3. கிராம நிர்வாக அலுவலர்,
   கிராம நிர்வாக அலுவலகம்,
   அச்சன்புதூர்.
4. துணை தாசில்தார், தாலுகா அலுவலகம்
   கடையநல்லூர்.
5. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம்,
   இடைகால்.
6. சபுராள் பீவி
7. ரெசவு முகைதீன்
8. செய்யது அலி பாத்திமா
9. முகம்மது இப்ராஹீம்
10. சாகுல் ஹமீது ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று (08.06.2026) விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. கிளிப்பாண்டி அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. M.தாஹிராபேகம் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், 6 முதல் 10 வரை பிரதிவாதிகளைப் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையிலும், வாதி இறந்துவிட்ட நிலையில், வாதியின் வாரிசுகளை வழக்கில் கட்சி சேர்க்க எந்தவித மேல்நடவடிக்கையும் எடுக்காததாலும், வாதி தரப்பில் எந்தவித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தினாலும், வாதியை அழைத்தும் ஆஜராகதாலும் வாதியின் வருகை தவறுகைக்காகவும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

வழக்கின் தபசில் சொத்துக்கள் வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டதென பிரதிவாதிக்கு எதிரில் விளம்புகை செய்தும், பிராது தபசில் சொத்தின் அனுபவத்தை மாண்புமிகு இந்நீதிமன்றம் குறிப்பிடும் ஒரு தினத்திற்குள் காலி செய்து வாதியிடம் பிரதிவாதி ஒப்படைத்து போக வேண்டியும், பிராது தபசில் சொத்தில் பிரதிவாதி அத்துமீறி ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டுமானத்தை சமூகம் நீதிமன்றம் குறிப்பிடும் ஒரு தினத்திற்குள் இடித்து அப்புறப்படுத்திப் போகும்படிக்கும், தவறும் பட்சத்தில் வாதியின் செலவில் ஆக்கிரமிப்பு கட்டுமானங்களை இடித்து அப்புறப்படுத்த வாதிக்கு அனுமதியளிக்கும் படி உத்தரவிட கோரியும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை வாதிக்கு, பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| |
|---|
| No representation for plaintiff. Plaintiff called absent. Hence suit is dismissed for non-prosecution. |

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 08-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒப்பம்/–K.N.குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை.**

---

**மா.உ.நீதிமன்றம், செங்கோட்டை.**
அசல் வழக்கு எண்.78/2021
**தீர்ப்புரை (Fair / Draft)**
நாள்: 08.06.2026

---